# பணியமைப்பு விதிகள்

டி. ஆர்.ஸ்ரீதர்,
உதவி இயக்குனர் / விரிவுரையாளர்,
மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனம்,
சத்தியவிஜயநகரம்

# ஊரக வளர்ச்சித் துறையில் உள்ள பணியமைப்பு விதிகள்

- தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மாநிலப் பணி விதிகள்
- தமிழ்நாடு ஊரக வளர்ச்சி சார்நிலைப் பணி விதிகள்
- தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் மாநிலப் பணி விதிகள்
- தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்
- தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்
- தமிழ்நாடு அடிப்படை பணி விதிகள்
- ஊராட்சி ஒன்றிய பணி விதிகள்

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மாநிலப் பணி விதிகள்

வகை.1 (Category. 1) ... ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர்

வகை.2 (Category.2) ... ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்

வகை.3 (Category.3) ... ஊரக வளர்ச்சி துணை இயக்குநர்

வகை.4 (Category.4) ... ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர்

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மாநிலப் பணி விதிகள்

| பணியிட வகை | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| கூடுதல் இயக்குநர் | இணை இயக்குநர் நிலையிலிருந்து பதவி உயர்வின் மூலம் | இணை இயக்குநர் நிலையில் குறைந்தபட்சம் ஓராண்டு பணி முடித்திருத்தல் |
| இணை இயக்குநர் | உதவி இயக்குநர் நிலையிலிருந்து பதவி உயர்வின் மூலம் (22.7.1988க்கு முன்பு துணை இயக்குநர் நிலையில் இருந்து பதவி உயர்வின் மூலம்) | உதவி இயக்குநர் நிலையில் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டு பணி முடித்திருத்தல் |
| | 1) வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் இருந்து பணி மாறுதலில் பதவி உயர்வின் மூலம் | வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் ஈராண்டு பணி முடித்திருத்தல். (வ.வ.அ.(வஊ.) ... ஓராண்டு பணி / வ.வ.அ.(கிஊ.) ... ஓராண்டு பணி) |
| | 1) தலைமைச் செயலக பிரிவு அலுவலர் நிலையிலிருந்து பணி மாறுதலில் பதவி உயர்வின் மூலம் | தலைமைச் செயலக பிரிவு அலுவலர் பணியில் ஈராண்டு பணி / வட்டார வளர்ச்சி அலுவலர் பணியில் ஈராண்டு பணி |
| உதவி இயக்குநர் | 1) ஓராண்டில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 10% பணியிடம் நேரடி நியமனம் மூலம் அரசாணை (நிலை) எண்.904/ஊ.வ.து./ நாள்:8.11.1990). (அரசாணை(நிலை) எண்.275/ ஊ.வ.து./நாள்:5.4.1990.) அரசாணை (நிலை) எண்.84 ஊ.வ.து(இ1) நாள்.6.4.1994. அரசாணை (நிலை) எண்.324 ஊ.வ.து(இ1) நாள்.18.9.1997. | 1. பட்டப்படிப்பில் தேர்ச்சி.<br>2. வயது - 21 வயது முடிந்திருக்க வேண்டும் / 32 வயது முடிந்திருக்கக் கூடாது. (நியமன ஆண்டின் சூலை 1-ந் தேதியன்று)<br>3. SC/ST//MBC/Denotified Communities/ BC - 21 வயது முடிந்திருக்க வேண்டும் / 37 வயது முடிந்திருக்கக் கூடாது. (நியமன ஆண்டின் சூலை 1 ஆம் தேதியன்று)<br>4. இன சுழற்சி முறை பின்பற்றப்படும். |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மாநிலப் பணி விதிகள்

**பணிவரன் முறை:**

- ஒவ்வொரு ஆண்டிலும் காலியாகும் பணியிடங்களில் 10% நேரடி நியமனம் மற்றும் 90% பணிமாறுதல் மூலம் வட்டார வளர்ச்சி அலுவலர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெறுபவர்களுக்கும் பணிவரன்முறை பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறது.

**தகுதிகாண் பருவம் :**

- நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்படும் உதவி இயக்குநர் நிலையிலான பணியாளர்கள், பணியில் சேர்ந்த நாளிலிருந்து, தொடர் 3 ஆண்டு பணிக்காலத்தில் 2 ஆண்டு காலப் பணி முடித்தல் வேண்டும்.
- பணி மாறுதல் மூலம் நியமனம் செய்யப்படும் உதவி இயக்குநர் நிலையிலான பணியாளர்கள், பதவி உயர்வில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து, தொடர் 2 ஆண்டு பணிக்காலத்தில் ஓராண்டு காலப் பணி முடித்தல் வேண்டும்.
- தகுதிகாண் பருவம் நிறைவு செய்து ஆணையிடும் அலுவலர் - இயக்குநர், ஊ.வ.(ம)ஊ.து. (அ.ஆ.எண்.18/ஊ.வ.து(இ1)நாள்.20.01.1994).
- ஓராண்டு பயிற்சி உதவி இயக்குநராக பணிபுரிய வேண்டும்.

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மாநிலப் பணி விதிகள்

**<u>நேரடி நியமனம் மூலம் உதவி இயக்குநர்களாக பணிபுரிபவர்கள் தேர்ச்சி பெற வேண்டிய துறை தேர்வுகள் பின்வருமாறு:</u>**

நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்படும் உதவி இயக்குநர் நிலையிலான பணியாளர்கள், தகுதிகாண்பருவ காலத்திற்குள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் கீழ்காணும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டும்.

(அ.ஆ.எண்:33 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்: 02.03.2017).

- Scheme Administration (RD &PR Institution) and the TamilNadu Transparency in Tender Act 1998 and the TamilNadu Transparancy in Tenders Rules 2000 (T.C.No.111).
- Basic Technical skills for Administrators and e-gov modules of various RD Schemes and Administration (T.C.No.123).
- TamilNadu Panchayat Act 1994 and Rules (T.C.No.134).
- Poverty alleviation through self help Groups (T.C.No.56).
- The Account test for Executive Officer (T.C.No.152).
- Panchayat Development Account Test

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மாநிலப் பணி விதிகள்

**பயிற்சி :**

- 54 வாரங்களுக்கு ஊரக வளர்ச்சித்துறை அலுவலகங்கள் மற்றும் சார்புடைய துறைகளின் அலுவலகங்களில் களப்பயிற்சி பெற வேண்டும்.
- நேரடி நியமனம் மூலம் நியமனம் செய்யப்படும் உதவி இயக்குநர் நிலையிலான பணியாளர்கள், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 15 + 15 நாட்கள் நடத்தப்படும் பயிற்சிகளில் பங்கேற்று பயிற்சி பெறவேண்டும். தகுதிகாண் பருவம் நிறைவு செய்ய பயிற்சிக் காலம் தகுதிகாண் பருவம் (மற்றும்) ஆண்டு ஊதிய உயர்வுக்கு கணக்கில் சேரும்.
- அண்ணா மேலாண்மை தொழில்நுட்ப பயிற்சி மற்றும் மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 15 நாட்கள் பயிற்சி பெறுவதுடன் பயிற்சியின் இறுதியில் நடத்தப்படும் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

**பதவி உயர்வுக்கான தகுதி பெறும் நாள் :**

- தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மாநில பணிகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவிகளுக்கு, பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு அளிப்பதற்கான ஒவ்வோர் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிப்பதற்கான தகுதி பெறும் நாள் - பட்டியல் தயாரிக்கப்படும் ஆண்டின் மார்ச் 1-ஆம் தேதி ஆகும்.

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி சார்நிலைப் பணி விதிகள்

**<u>தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சி சார்நிலைப் பணிகள் - புதிய பணி விதிகள் உருவாக்கம் :</u>**

**(அரசாணை (நிலை) எண்.587/ஊ.வ.(ம)உ.து./நாள்: 12.4.1984 )**

| | | |
|---|---|---|
| வகை.1 | (Category.1) ... | வட்டார வளர்ச்சி அலுவலர் |
| வகை.2 | (Category.2) ... | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் |
| வகை.3 | (Category.3) ... | விரிவு அலுவலர்கள் (தற்போது அனைத்து பணியிடங்களும் து.வ.வ.அ. நிலைக்கு தரம் உயர்த்தப்பட்டது) |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி சார்நிலைப் பணி விதிகள்

| பணியிட வகை | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| வட்டார வளர்ச்சி அலுவலர் | து.வ.வ.அ. நிலையிலான பதவிகளிலிருந்து பதவி உயர்வின் மூலம்<br>(<u>திருத்தம்:-</u>அரசாணை (நிலை)எண்.9/<u>ஊ</u>.வ.(ம) <u>ஊ</u>.து.(E4) துறை, நாள்: 25.1.2010).<br>அ.ஆ.(நி).எண்.127 <u>ஊ</u>.வ.(ம)<u>ஊ</u>.து(இ5) நாள்.21.9.2015. | து.வ.வ.அ.(ஊராட்சிகள்) / மண்டல து.வ.வ.அலுவலர் ஆக தனித்தன்மையுடன் (Independently) ஓராண்டு காலத்திற்கு குறையாமல் பணி புரிந்திருத்தல் வேண்டும்.<br>து.வ.வ.அ.(ஊராட்சிகள்) / ம.து.வ.வ.அ 15 நாட்கள் ஒருங்கிணைந்த பயிற்சி (மற்றும்) து.வ.வ.அ. (ஊராட்சிகள் / ம.து.வ.வ.அ. அல்லாத) 15 நாட்கள் ஒருங்கிணைந்த பயிற்சி முடித்திருத்தல் வேண்டும். |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(அ.ஆ.(நிலை) எண்.138/ <u>ஊ</u>.வ.(ம) <u>ஊ</u>(பஅ4)துறை, நாள்:28.8.2008-ன்படி, அனைத்து விரிவு அலுவலர் பணியிடங்களும் 28.8.2008 முதல் து.வ.வ.அ. பணியிடங்களாக நிலை உயர்த்தி ஆணையிடப் பட்டது) | உதவியாளர்/கணக்கர்/ ஊர்நல அலுவலர்-நிலை.1 ஆகிய பதவிகளிலிருந்து பதவி உயர்வின் மூலம்<br>(<u>திருத்தம்:-</u>அரசாணை (நிலை)எண்.9/<u>ஊ</u>.வ.(ம)<u>ஊ</u>.து. (E4) துறை, நாள்: 25.1.2010) | ஊர்நல அலுவலர் - நிலை.1 (மற்றும்) உதவியாளர் (அல்லது) கணக்கர் ஆகிய பதவிகளில் தலா ஓராண்டு காலத்திற்கு குறையாமல் பணி புரிந்திருத்தல் வேண்டும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்பொழுது, துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு பெற முதல்நிலை ஊர்நல அலுவலர் நிலை-1 பதவியில் குறைந்த பட்சம் ஓராண்டு பணிபுரிந்து பணித்தகுதி பெற வேண்டும் என்ற விதி அரசாணை எண் 55 <u>ஊ</u>.வ.(ம)<u>ஊ</u>.(E4)துறை நாள்.26.05.2017-ன் படி விலக்கிக் கொள்ளப்பட்டது. ஆனால் உதவியாளர் நிலையில் ஈராண்டு பணிமுடித்திருக்க வேண்டும். |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி சார்நிலைப் பணி  விதிகள்

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | பணி நியமன அலுவலர் |
|---|---|---|
| 1. | வட்டார வளர்ச்சி அலுவலர் | மாவட்ட ஆட்சியர்<br>(<u>திருத்தம்:-</u><br>அ.ஆ.(நிலை) எண்.27/ ஊ.வ.து./ நாள்: 17.1.1990 &<br>அ.ஆ.(நிலை) எண்.277/ ஊ.வ.து./ நாள்: 23.12.1992) |
| 2. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | மாவட்ட ஆட்சியர் |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி சார்நிலைப் பணி விதிகள்

**<u>பணிவரன் முறை:</u>**

•வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் இரு பதவிகளிலும் தனித்தனியாக பணிவரண்முறை செய்யப்பட வேண்டும்.

**<u>தகுதிகாண் பருவம் :</u>**

•பணி மாறுதல் மூலம் நியமனம் செய்யப்படும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையிலான பணியாளர்கள், பதவி உயர்வில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து, தொடர் 2 ஆண்டு பணிக்காலத்தில் ஓராண்டு கால பணி முடித்தல் வேண்டும். மாவட்ட ஆட்சியரால் தகுதிகாண்பருவம் முடித்து ஆணையிடப்படல் வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் பணியிடத்திற்கு தகுதிகாண் பருவம் இல்லை.

**<u>மாறுதல் அதிகாரம் :</u>**

| | | |
|---|---|---|
| (1) மாவட்டத்திற்குள் மாறுதல் அதிகாரம் | ... | மாவட்ட ஆட்சித்தலைவர். |
| (2) ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு மாறுதல். | ... | ஊரக வளர்ச்சி இயக்குநர். |

**<u>பதவி உயர்வுக்கான தகுதி பெறும் நாள் :</u>**

தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சி சார்நிலைப் பணிகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவிகளுக்கு, பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு அளிப்பதற்கான ஒவ்வோர் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிப்பதற்கான தகுதி பெறும் நாள் - பட்டியல் தயாரிக்கப்படும் ஆண்டின் மார்ச் 1-ஆம் தேதி ஆகும்.

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

(அரசாணை (நிலை) எண்.588/ஊ.வ.(ம)உ.து./நாள்: 12.4.1984 )

- தமிழ்நாடு அமைச்சுப் பணிகளின் கீழ், கீழ்காணும் பதவிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(1) இளநிலை உதவியாளர்

(2) ஊர்நல அலுவலர் - நிலை.2

(3) காசாளர்

(4) தட்டச்சர்

(5) சுருக்கெழுத்துத் தட்டச்சர்

(6) உதவியாளர்

(7) கணக்கர்

(8) ஊர்நல அலுவலர் - நிலை.1

(9) பதிவுரு எழுத்தர்

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

1) <u>நியமன முறை:</u>

**<u>இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / காசாளர் :</u>**

- இளநிலை உதவியாளர் பதவியில் ஆண்டுதோறும் ஏற்படும் காலிப் பணியிடங்களில், 20% காலிப்பணியிடங்களை தகுதியுள்ள ஊராட்சி செயலர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதன் மூலம் நியமனம்.
- இளநிலை உதவியாளர் பதவியில் ஆண்டுதோறும் ஏற்படும் காலிப் பணியிடங்களில், 10% காலிப்பணியிடங்களை தகுதியுள்ள இரவு காவலர் / அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / ஊரக மகளிர் நல அமைப்பாளர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதன் மூலம் நியமனம்.
- இளநிலை உதவியாளர் பதவியில் ஆண்டுதோறும் ஏற்படும் காலிப் பணியிடங்களில், 25% ஊரக வளர்ச்சி அலகில் பணியிடையே காலமான அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமனம் அளிக்க ஒதுக்கீடு.
- மீதமுள்ள 45% பணியிடங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நிரப்பப்படுகிறது.

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

1) <u>நியமன முறை:</u>

**<u>உதவியாளர் / கணக்கர் பணியிடங்கள் :</u>**

மாவட்ட அளவில் பராமரிக்கப்பட்டு வரும் இ.நி.உ./ ஊ.ந.அ.நிலை–2/ காசாளர்/ தட்டச்சர்களுக்கான ஒருங்கிணைந்த முன்னுரிமைப் பட்டியலிலிருந்து, தகுதியுள்ளவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதன் மூலம் நியமனம்.

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

**3) <u>நியமன அலுவலர் (மாவட்ட அளவில்) :</u>**

ஒவ்வொரு வருவாய் மாவட்டமும் தனித்தனி அலகாகும்.

•ஒரு பணி விதி அமலாக்கத்தைத் தொடர்ந்து, தமிழ்நாடு கிராம சேவக் பணி விதிகளின் கீழ் இருந்த ஊர்நல அலுவலர் - நிலை.1 / நிலை.2 பணியிடங்களுக்கான பணி விதிகள் ரத்து செய்யப்பட்டு, 1.6.1979 முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் கீழ் கொண்டு வரப்பட்டது.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | பணி நியமன அலுவலர் |
|---|---|---|
| 1. | கணக்கர் / உதவியாளர் / ஊ.ந.அ. நிலை.1 | மாவட்ட ஆட்சியர் |
| 2. | இ.நி.உ /தட்டச்சர்/ சுருக்கெழுத்துத் தட்டச்சர் / காசாளர்/ ஊ.ந.அ. நிலை.2 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வளர்ச்சி) |

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

## <u>நியமன முறை / தகுதிகள் :</u>

<table>
<tr><th>பணியிட வகை</th><th>நியமன முறை</th><th>தகுதிகள்</th></tr>
<tr><td rowspan="6">இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர்-நிலை.2/காசாளர்/ தட்டச்சர்/ சுருக்கெழுத்து தட்டச்சர்-நிலை.3.</td><td rowspan="6">1. தமிழ்நாடுஅரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம்.<br>2. கருணை அடிப்படை மூலம் நியமனம்.<br>3. இளநிலை உதவியாளர் பதவியில் ஆண்டுதோறும் ஏற்படும் காலிப்பணியிடங்களில், 20% காலிப்பணியிடங்களை தகுதியுள்ள ஊராட்சி செயலர்களுக்கு பதவிஉயர்வு அளிப்பதன் மூலம் நியமனம். (*) (@)<br>4. இளநிலை உதவியாளர் பதவியில் ஆண்டுதோறும் ஏற்படும் காலிப் பணியிடங்களில்,10% காலிப்பணியிடங்களை தகுதியுள்ள இரவு காவலர் / அலுவலக உதவியாளர் / பதிவறை எழுத்தர் / ஊரக மகளிர் நல அமைப்பாளர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதன் மூலம் நியமனம். (*)<br>(*)அ.ஆ.(நிலை)எண்.240/ ஊ.வ.(இ5) துறை, நாள்:7.9.2000-ல் பணிமாற்றல் முறையில் பணியமர்த்துவது தொடர்பான திருத்திய நிபந்தனைகள்/ நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.<br>(@)அ.ஆ.(நிலை)எண்.20/ஊ.வ.(ம) ஊ(இ7)துறை/ நாள்:25.1.2008-ன்படி, காலிப் பணியிடங்களில் ஊராட்சி செயலர்களுக்கு 20% பதவி உயர்வு.</td><td>த.நா.மாநில மற்றும் சார்நிலை பணி விதிகள் - அட்டவணை-1ல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச கல்வித் தகுதி (SSLC) பெற்றிருத்தல் வேண்டும்.</td></tr>
<tr><td><u>தட்டச்சர்:</u><br>தட்டச்சுத் தேர்வில் - தமிழ் (ம) ஆங்கிலம் உயர்நிலை (அ) தமிழ் உயர்நிலை /ஆங்கிலம் கீழ்நிலை (அ) ஆங்கிலம் உயர்நிலை / தமிழ் கீழ் நிலை தேர்ச்சி பெற்றிருத்தல்வேண்டும்.</td></tr>
<tr><td><u>சுருக்கெழுத்துத் தட்டச்சர் - நிலை.3:</u><br>சுருக்கெழுத்துத் தட்டச்சுத் தேர்வில் தமிழ் (ம) ஆங்கிலம் உயர்நிலை (அ) தமிழ் உயர்நிலை / ஆங்கிலம் கீழ்நிலை (அ) ஆங்கிலம் உயர்நிலை / தமிழ் கீழ் நிலை தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.</td></tr>
<tr><td>பணி மாறுதல் மூலம் இளநிலை உதவியாளர் நிலைக்கு பதவி உயர்வு பெற - கீழ்நிலை பதவியில் குறைந்தது 7 ஆண்டு காலம் பணி புரிந்திருத்தல் வேண்டும்.</td></tr>
<tr><td>தமிழ்நாடு அடிப்படைப் பணியிலிருந்து பணி மாறுதல் மூலம் இளநிலை உதவியாளர் நிலைக்கு பதவி உயர்வு பெற - 3 மாத காலம் பதிவறை எழுத்தருடனும், அடுத்து 3 மாத காலம் இளநிலை உதவியாளருடனும் எழுத்தர் பணி பயிற்சியினை 6 மாத காலத்தில் பெற்றிருத்தல் வேண்டும். வழக்கமான பணிகளுக்கு பாதிப்பின்றி தினந்தோறும் 2 மணி நேரம் இத்தகைய பயிற்சியினை பெற்றிருத்தல் வேண்டும்.</td></tr>
<tr><td>நியமன ஆண்டின் சூலை 1-ந்தேதி அன்று 30 வயது முடிந்திருத்தல் கூடாது. (MBC/Denotified Comminities/BC & BC(Muslims) – 32 Years) / (SC/SC(Arunthathiyars)/ST & Destitute Widows of all Castes – 35 Years). (No maximum age limit for Candidates belonging to SC/SC(A)/ ST/MBC/DC/BC/BC(M)/ & Destitute Widows of all Castes who possess a General Educational Qualification which is higher than the Minimum General Educational Qualification - (i.e.) – who have passed PUC/HSC/Diploma/Degree).</td></tr>
</table>

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

## நியமன முறை / தகுதிகள் :

| | | |
|---|---|---|
| ஊதவியாளர்/ கணக்காயர்/ ஊர்நல அலுவலர்- நிலை.1. | இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர்-நிலை.2 / காசாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் ஆகிய பதவிகளிலிருந்து பதவி உயர்வின் மூலம் | இளநிலை உதவியாளர் (அல்லது) காசாளர் பதவியில் ஓராண்டு காலத்திற்கு குறையாமல் பணி புரிந்திருத்தல் வேண்டும். (ஊ.ந.அ. நிலை.2 பதவியில் ஓராண்டு பணித் தகுதி பெறுவது ரத்து செய்யப்பட்டது - அ.ஆ.(நிலை)எண்.22/ஊ.வ.(ம)ஊ.து./ (E4)/ நாள்: 18.3.2010).<br>தட்டச்சர் பதவியில் உள்ளோர், தட்டச்சர் பணிகளுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் ஓராண்டு காலத்திற்கு இளநிலை உதவியாளராக பயிற்சி பெறவேண்டும்.<br>சுருக்கெழுத்துத் தட்டச்சர் - நிலை.3 பதவியில் 5 ஆண்டு காலத்திற்கு குறையாத பணிக்காலம் முடித்தோரை பணிமாறுதலில் 5:1 என்ற விகிதத்தில் உதவியாளராக நியமனம் செய்ய பரிசீலிக்கலாம். |
| | (அரசாணை (நிலை) எண்.35/ ஊ.வ.(மற்றும்)ஊ(E4) துறை / நாள்: 17.05.2011-ன்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒரே ஒரு முறை மட்டும் (One Time Measure) நேரடிநியமனம் மூலம் காலியாக இருந்த பணியிடங்களில் 50% பணியிடங்கள் நிரப்பப்பட்டது)<br>(தற்போது ஒவ்வோர் ஆண்டும் ஏற்படும் நிலையான உதவியாளர் காலிப் பணியிடங்களில் 25%-ஐ TNPSC மூலமாக நேரடி நியமனம் மூலம் நிரப்ப ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது) (அரசாணை(நிலை) எண்.140/ ஊ.வ.(ம)ஊ.(இ4)துறை, நாள்: 29.10.2014). | நேரடியாக நியமனம் செய்யப்படும் உதவியாளர் பணி நியமன ஆண்டு 1.7-ல் (ஜீலை 1-ஆம் தேதியன்று) 30 வயது முடிந்திருக்க கூடாது. (MBC/Denotified Comminities/BC & BC(Muslims) – 32 Years) / (SC/SC(Arunthathiyars)/ST & Destitute Widows of all Castes – 35 Years).<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தால் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். |

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

## நியமன அலுவலர் (மாவட்ட அளவில்) :

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | பணி நியமன அலுவலர் |
|---|---|---|
| 1. | உதவியாளர் / கணக்காயர் / ஊர்நல அலுவலர் - நிலை.1 | மாவட்ட ஆட்சியர் |
| 2. | இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் - நிலை.2 / காசாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர்/ பதிவறை எழுத்தர் | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) |

# தமிழ்நாடு அடிப்படை பணி விதிகள்

## பதிவுரு எழுத்தர் :

கல்வித்தகுதி : 10 வகுப்பு வரை படித்தவர் (தேர்ச்சி/ தோல்வி) (Completed SSLC)

வயது : நேரடியாக நியமனம் செய்யப்படும் பதிவரை எழுத்தர் பணி நியமன ஆண்டு 1.7-ல் (ஜீலை 1-ஆம் தேதியன்று) 30 வயது முடிந்திருக்க கூடாது. (MBC/Denotified Comminities/BC & BC(Muslims) – 32 Years) / (SC/SC(Arunthathiyars)/ST & Destitute Widows of all Castes – 35 Years).

- மூன்றாண்டு அலுவலக உதவியாளர் பணி முடித்தவர் உரிய கல்வி தகுதி இருப்பின் முதுநிலை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கலாம் (ஒவ்வொரு மூன்றாவது பணியிடம்)

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

**பணிவரன் முறை:**

- பதிவுரு எழுத்தர், இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களில் தனித்தனியாக பணிவரன்முறை செய்யப்பட வேண்டும்.

**தகுதிகாண் பருவம் :**

- இளநிலை உதவியாளர் நிலையில் நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் (மற்றும்) நேரடி நியமனம் மூலம் உதவியாளர் நிலையில் நியமனம் செய்யப்படும் பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாளிலிருந்து, தொடர் 3 ஆண்டு பணிக்காலத்தில் 2 ஆண்டு கால பணி முடித்தல் வேண்டும்.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் கீழ்க்கண்ட துறைத் தேர்வுகளில் தகுதி காண் பருவ காலத்திற்குள் தேர்ச்சி பெறுதல் வேண்டும் என அரசாணை எண்.33 ப.நி.சீ.துறை நாள்.02.03.2017-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1 Tamilnadu Panchayat Act 1994 and Rules and constitution of India. (T.C.No.8).

2. The Panchayat Development Account Test (T.C.No.166).

3. Scheme Administration (T.C.No.10).

4.The Tamilnadu Govt. Office Manual Test (T.C.No.172).

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

- தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை - 3 ஆக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள், தொழில்நுட்பக் கல்வித் துறையினால் நடத்தப்படும் 'Certificate Course in Computer on Office Automation"-ல் தகுதிகாண் பருவ காலத்திற்குள் (அல்லது) பணி நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து 2 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறுதல் வேண்டும். (அ.ஆ.(நிலை) எண்.130/ப(ம)நி.சீ.(S)து., நாள்: 22.7.2008 (மற்றும்) அ.ஆ.(நிலை) எண்.179/ப(ம)நி.சீ.(B)து., நாள்: 19.12.2012).
- பவானிசாகர் சிவில் சர்வீஸ் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படைப் பயிற்சியில் பங்கேற்று, தகுதிகாண் பருவ காலத்திற்குள் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். இளநிலை உதவியாளர் நிலையில் / நேரடி உதவியாளர் நிலையில் தகுதிகாண் பருவம் நிறைவு செய்ய மேற்படி பயிற்சியில் தேர்ச்சி பெறுதலை நிபந்தனையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலம் தகுதிகாண் பருவம் (மற்றும்) ஆண்டு ஊதிய உயர்வுக்கு கணக்கில் சேரும்.
- பணியில் சேர்ந்து 5 ஆண்டு காலம் வரை தகுதிகாண்பருவ காலம் நீட்டிக்கப்படலாம். 5 ஆண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்வதற்கான உரிய தகுதிகளை பெறத் தவறும்பட்சத்தில், நேரடி நியமனம் எனில் -- பணிநீக்கம் செய்யப்படுவர் / பணி மாறுதல் மூலம் நியமனம் எனில் -- கீழ்நிலை பதவிக்கு பதவியிறக்கம் செய்யப்படுவர்.
- தட்டச்சர் (மற்றும்) சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலையிலிருந்து உதவியாளராக பணி மாறுதலில் பதவி உயர்வு பெறுவோர், பதவி உயர்வு பெற்ற நாளிலிருந்து 2 ஆண்டு காலத்திற்குள் பவானிசாகர் சிவில் சர்வீஸ் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படைப் பயிற்சியில் பங்கேற்று, தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் தேர்வில் தேர்ச்சி பெறத் தவறும்பட்சத்தில், தேர்வில் தேர்ச்சி பெறும் வரை தொடர் ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியில்லை.

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

**உதவியாளர் பணியிடத்தில் தகுதிகாண் பருவம் :**

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் கீழ்க்கண்ட துறைத் தேர்வுகளில் தகுதி காண் பருவ காலத்திற்குள் தேர்ச்சி பெறுதல் வேண்டும் என அரசாணை எண்.33 ப.நி.சீ.துறை நாள்.02.03.2017-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

1. Tamilnadu Panchayat Act 1994 and Rules and constitution of India (T.C.No.8)
2. The Panchayat Development Account Test (T.C.No.166)
3. Scheme Administration (T.C.No.10).
4. The Tamilnadu Govt. Office Manual Test (T.C.No.172)

- பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

**மாறுதல் அதிகாரம்:**

**மாவட்டத்திற்குள் மாறுதல் அதிகாரம் :**

- உதவியாளர் நிலையிலான பணியாளர்கள் ... மாவட்ட ஆட்சித்தலைவர்
- இ.நி.உ. நிலையிலான பணியாளர்கள் ... மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)
- ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கு மாறுதல். ... ஊரக வளர்ச்சி இயக்குநர்

## பதவி உயர்வுக்கான தகுதி பெறும் நாள் :

•தமிழ்நாடு அமைச்சுப் பணிகளில் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவிகளுக்கு, பணி மாறுதல் மூலம் பதவி உயர்வு அளிப்பதற்கான ஒவ்வோர் ஆண்டிற்கான தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரிப்பதற்கான தகுதி பெறும் நாள் - பட்டியல் தயாரிக்கப்படும் ஆண்டின் மார்ச் 15-ஆம் தேதி ஆகும்.

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

**ஆண்டு ஊதிய உயர்வு அங்கீகாரம்/விடுப்பு அங்கீகாரம்/மாறுதல் உள்ளிட்ட அதிகாரங்கள்:**

**(Delegation of Certain Powers-Orders) - G.O.(Ms.)No.451/RD(C.IV)Dept.,Dt.30.5.1990)**

- துணை வட்டார வளர்ச்சி அலுவலர்/உதவியாளர் நிலையிலான பணியாளர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு அங்கீகாரம் அளிப்பதற்கான அதிகாரம் கோட்ட வளர்ச்சி அலுவலர்களிடம் இருந்ததை மாற்றம் செய்து, வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு அளித்து ஆணையிடப்பட்டது.
- இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர்-நிலை.2 / காசாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்துத் தட்டச்சர் / ஈப்பு ஓட்டுநர் / பதிவறை எழுத்தர் ஆகியோரை மாறுதல் செய்யும் அதிகாரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளருக்கு (வளர்ச்சி) அளித்து ஆணையிடப்பட்டது.
- இளநிலை உதவியாளர் நிலையிலான பணியாளர்கள் / பதிவறை எழுத்தர் / அலுவலக உதவியாளர் ஆகியோருக்கான விடுப்பினை கால அளவினை கருத்தில் கொள்ளாது அலுவலகத் தலைவரே (வட்டார வளர்ச்சி அலுவலர் / உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்கள்) அங்கீகரித்து ஆணையிடலாம்.

# தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள்

**சுருக்கெழுத்துத் தட்டச்சர் :**

(அரசாணை (நிலை) எண்.256 / ப(ம)நி.சீ.(பணியாளர்.B)துறை, நாள்: 1.8.1992 &
அரசாணை (நிலை) எண்.284 / ப(ம)நி.சீ.(பணியாளர்.B)துறை, நாள்: 19.8.1992)

- தட்டச்சர், சுருக்கெழுத்துத்தட்டச்சர் ஆகிய பதவிகள் தனித்தனி வகை பணியிடங்களாக்கபட்டன.
- சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணியிடங்கள் - சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை.1 / நிலை.2 / நிலை.3 என வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- சுருக்கெழுத்துத் தட்டச்சர்-நிலை.3 பதவியில் தகுதிகாண்பருவம் நிறைவு செய்தோர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் பணி நிலையிலேயே தொடர விருப்பம் தெரிவிப்போருக்கு மட்டுமே சுருக்கெழுத்துத் தட்டச்சர்-நிலை.2 ஆக பதவி உயர்வு வழங்கலாம். சுருக்கெழுத்துத் தட்டச்சர்-நிலை.2 பணியாளர்களை சுருக்கெழுத்துத் தட்டச்சர்-நிலை.1 ஆக பதவி உயர்வளிக்க பரிசீலிக்கலாம்.
- சுருக்கெழுத்துத் தட்டச்சர்-நிலை.1 பணியாளர்களை துறைத் தலைமை அலுவலர்களுக்கும், சுருக்கெழுத்துத் தட்டச்சர்-நிலை.2 பணியாளர்களை 2-ஆம் நிலை அலுவலர்களுக்கும் (கூடுதல் இயக்குநர்/இதர 2-ஆம் நிலை அலுவலர்கள் (மற்றும்) இணை இயக்குநர்கள்) மட்டுமே ஒப்பளிக்கலாம்.
- இவர்களுக்கு தனியாக முதுநிலைப் பட்டியல் தயார் செய்து, 5 ஆண்டுகளுக்கு குறைவில்லாத பணி முடித்தவர்களுக்கு உதவியாளராக பணிமாற்றம் பெற விருப்பம் தெரிவித்து விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டும் உதவியாளராக பணி மாற்றம் செய்து ஆணையிடப்படுகிறது.

# தமிழ்நாடு அடிப்படை பணி விதிகள்

கீழ்காணும் அரசு தரப்பு பணியிடங்கள் அடங்கும்:

- அலுவலக உதவியாளர்
- காவலர்
- பெருக்குபவர்

# தமிழ்நாடு அடிப்படை பணி விதிகள்

## அலுவலக உதவியாளர் :

**கல்வித்தகுதி : 8 ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.**

**வயது : நேரடியாக நியமனம் செய்யப்படும் அலுவலக உதவியாளர் பணி நியமன ஆண்டு 1.7-ல் (ஜீலை 1-ஆம் தேதியன்று) 30 வயது முடிந்திருக்க கூடாது.** (MBC/Denotified Comminities/BC & BC(Muslims) – 32 Years) / (SC/SC(Arunthathiyars)/ST & Destitute Widows of all Castes – 35 Years).

- **சைக்கிள் ஓட்ட தெரிந்திருக்க வேண்டும்.**
- Class IV **லிருந்து (காவலர் பணியிடம்) உரிய கல்வி தகுதியிருந்து தகுதிகாண் பருவம் முடித்தவர்கள் பணி மாறுதல் மூலம் நியமிக்கப்படுவார்கள்.**
- LMV **ஓட்டுனர் உரிமம் வைத்துள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கலாம்.**

# தமிழ்நாடு அடிப்படை பணி விதிகள்

## காவலர் :

கல்வித்தகுதி : எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

வயது : நேரடியாக நியமனம் செய்யப்படும் காவலர் பணி நியமன ஆண்டு 1.7-ல் (ஜீலை 1-ஆம் தேதியன்று) 30 வயது முடிந்திருக்க கூடாது. (MBC/Denotified Comminities/BC & BC(Muslims) – 32 Years) / (SC/SC(Arunthathiyars)/ST & Destitute Widows of all Castes – 35 Years).

# தமிழ்நாடு அடிப்படை பணி விதிகள்

| | |
|---|---|
| நியமன அலுவலர் | : மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் ( வளர்ச்சி ) |
| பணி வரன்முறை | : மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் ( வளர்ச்சி ) |
| தகுதிகாண் பருவம் | : தொடர் 3 ஆண்டுகளில் ஓராண்டு பணி திருப்திகரமாக முடித்திருக்க வேண்டும். |

# ஊராட்சி ஒன்றிய பணி விதிகள்

கீழ்காணும் பணியிடங்கள் ஊராட்சி ஒன்றிய பணியிடங்களில் அடங்கும்:

- பதிவுரு எழுத்தர்
- அலுவலக உதவியாளர்
- காவலர்
- பெருக்குபவர்
- ஈப்பு ஓட்டுனர்
- தனிதிறன் வாய்ந்த உதவியாளர் (நிலை 2) (பொருத்துனர்)
- தனிதிறன் வாய்ந்த உதவியாளர் (நிலை 2) (மின் பணியாளர்)
- தனிதிறனற்ற உதவியாளர் (மின் உதவியாளர்)
- உதவி மருத்துவ அலுவலர் (அலோபதி/இந்திய மருத்துவம்)
- மருந்தாளுனர்
- செவிலியர்
- தூய்மை பணியாளர்

# ஊராட்சி ஒன்றிய பணி விதிகள்

ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களை ஊராட்சி ஒன்றிய நியமனக்குழு மூலம் நிரப்பிட வேண்டும்.

நியமன குழு உறுப்பினர்கள் விவரம்:

1. ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்
2. ஊராட்சி ஒன்றியக் குழு துணைத் தலைவர்
3. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்.

# ஊராட்சி ஒன்றிய பணி விதிகள்

நேரடி நியமனத்தின் மூலம் பணியமர்த்தப்படுபவர் பணி விதிகளின் படியான அதிகபட்ச வயது வரம்பிற்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.

(2) பணிவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

(3) நியமனத்தில் பணி விதிகளின்படி இட ஒதுக்கீடு அடிப்படையில் சுழற்சி முறை (Communal Rotation) பின்பற்றப்பட வேண்டும்.

(4) நேரடி நியமனமானது மன்றத்தின் முன் அனுமதியுடன் செய்யப்பட வேண்டும்.

(5) நாளேடுகளில் விளம்பரம் செய்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் வேலை வாய்ப்பகம் மூலம் பெறப்பட்டப் பட்டியலில் இருந்து நியமனம் செய்யப்பட வேண்டும். ஊராட்சி ஒன்றிய நிருவாக பணிவிதிகளின்படி, பதவி உயர்வு மூலம் நிரப்பப்படுவதாயின் உரிய கல்வித் தகுதி மற்றும் கீழ்நிலைப்பதவியில் தகுதிப் பணிக்காலம் முடித்ததன் அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.

(7) பணி விதிகளின் அடிப்படையில் ஓய்வு பெறும் நாள் கணக்கிடப்பட வேண்டும்.

# ஊராட்சி ஒன்றிய பணி விதிகள்

(8) காலிப் பணியிடங்களில் பணியமர்த்த பணியாளர்களை தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும்முன் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நியமனக்குழு கடைபிடிக்க வேண்டும் :-

(1) நிரப்பப்படவுள்ள பணியிடங்கள் ஏற்கனவே அரசு அனுமதித்துள்ள பணியிடங்களாக இருத்தல் வேண்டும். தற்காலிகமாக அரசு அனுமதித்த பணியிடமாக இருந்தால் தொடர் நீட்டிப்பாணை அரசிடம் இருந்து பெற்றிருக்க வேண்டும்.

(2) இந்த பணியிடங்கள் அரசினால் மறையும் பணியிடங்களாக (Vanishing Posts) அல்லது மிகைப் பணியிடங்களாக (Supernumeri Posts) அறிவிக்கப்பட்டவைகளாக இருத்தல் கூடாது.

(3) அரசினால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில், பதவி உயர்வு, பணி ஓய்வு மற்றும் இறப்பு ஆகிய காரணங்களினால் எழும் காலியிடங்களை மட்டுமே நிரப்ப வேண்டும். தற்காலிக காலிப் பணியிடங்களை நிரப்பக் கூடாது.

# ஊராட்சி ஒன்றிய பணி விதிகள்

(4) நியமன ஆணை வெளியிடுவதற்கு முன்னர் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் நியமனக்குழுவின் முடிவு தொடர்பான விவரங்களை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சியருக்கு தெரியப்படுத்தி இசைவு பெற வேண்டும். இசைவு அளிக்கும் முன்னர், பணி விதிகள், நெறிமுறைகள், நிபந்தனைகள், அரசாணைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளனவா என்பதை மாவட்ட ஆட்சியர் உறுதி செய்யவேண்டும். இசைவு அளிக்கப் படுகின்றதா? அல்லது மறுக்கப்படுகின்றதா? என்பதை மாவட்ட ஆட்சியர் பதினைந்து (15) நாட்களுக்குள் தெரியப்படுத்த வேண்டும். இசைவு பெற்றதும் மூன்று(3) நாட்களுக்குள் நியமன அலுவலர் ஆணைகள் வெளியிடவேண்டும்.

# ஊராட்சி ஒன்றிய பணி விதிகள்

(5) நியமனக் குழுவின் ஆய்வுக்கு வைக்கப்படும் பொருள் தொடர்பான குறிப்பில், விதிகள், நெறிமுறைகள், நிபந்தனைகள், அரசாணைகள் போன்ற விவரங்களைக் குறிப்பிட்டு நியமனக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டியது ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்) ஆகியோரின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் பணி விதிகள்

கீழ்காணும் பணியிடங்கள் இதில் அடங்கும் :

1. கண்காணிப்பு பொறியாளர்
2. செயற் பொறியாளர்
3. உதவி செயற் பொறியாளர்
4. உதவிப் பொறியாளர்

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

கீழ்காணும் பணியிடங்கள் இதில் அடங்கும் :

1. முதுநிலை வரைவாளர்
2. இளநிலைப் பொறியாளர்
3. பணிப்பார்வையாளர்
4. சாலை ஆய்வாளர்

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| வ. எண் | பதவி | நியமனமுறை | தகுதிகாண் பருவகாலம் |
|---|---|---|---|
| 1 | உதவி பொறியாளர் (ஊ.வ.) | நேரடி நியமனம் | 2 ஆண்டுகள் (தொடர்ச்சியான 3 ஆண்டுகளில்) |
| | | பதவி உயர்வு மூலம் | 1 ஆண்டு (தொடர்ச்சியான 2 ஆண்டுகளில்) |
| 2 | இளநிலை பொறியாளர் | பதவி உயர்வு மூலம் | 1 ஆண்டு (தொடர்ச்சியான 2 ஆண்டுகளில்) |
| 3 | பணிப்பார்வையாளர்கள் | நேரடி நியமனம் | 2 ஆண்டுகள் (தொடர்ச்சியான 3 ஆண்டுகளில்) |
| | | பதவி உயர்வு மூலம் | 1 ஆண்டு (தொடர்ச்சியான 2 ஆண்டுகளில்) |
| 4 | சாலை ஆய்வாளர் | நேரடி நியமனம் | 2 ஆண்டுகள் (தொடர்ச்சியான 3 ஆண்டுகளில்) |
| 5 | முதுநிலை வரைதொழில் அலுவலர் | பதவி உயர்வு மூலம் | 1 ஆண்டு (தொடர்ச்சியான 2 ஆண்டுகளில்) |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணி | நியமன முறை | தகுதிகள் |
| --- | --- | --- |
| சாலை ஆய்வாளர் | நேரடி ஆள் எடுப்பு மூலமாக | 1.அரசாங்கத்தால் அங்கீகரிப்பட்ட நிறுவனத்தில் கட்டிட (Civil Draftman Ship) வரைபடம் எழுதுவதில் வழங்கப்படும் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தின் சான்றிதழ் (ITI Certificate )பெற்றிருத்தல் வேண்டும்.<br>கட்டிட பொறியியல் பட்டயப் படிப்பில் (னுஊநு) தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>2. வயது : நியமன ஆண்டில் ஜீலை-1-ஆம் தேதி 35 வயது முடிந்திருத்தல் கூடாது. |
| | நியமன அலுவலர் | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| | தகுதிகாண் பருவம் | தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும். |
| | நியமன முறை | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் பெற்று மேலும் நாளிதழ்களில் விளம்பரம் செய்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான தேர்வுக்குழு மூலம் நியமிக்க வேண்டும். |
| | ஊதிய நிர்ணயம்/ஊதிய உயர்வு | பணம் பெற்று வழங்கும் அலுவலர் (வ.வ.அ) |
| | சிறப்பு நிலை/ தேர்வு நிலை | மாவட்ட ஆட்சியர் |
| | விடுப்பு அனுமதி | ஊதியம் வழங்கும் அலுவலர் விடுப்பு அனுமதிக்கலாம். 30 நாட்களுக்கு மேல் விடுப்பு எடுப்பின் அதன் விபரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்க வேண்டும். |
| | முன்பணம் | வாகன முன்பணம்/ வீடு கட்ட முன்பணம் மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்க வேண்டும். |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணியின் பெயர் | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| ஒன்றிய பணி மேற்பார்வையாளர் | நேரடி ஆள் எடுப்பு மூலமாக | கட்டிட பொறியியல் பட்டயப் படிப்பு(DCE) தேர்ச்சி.<br>அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் மூலம் பொறியியல் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர் அல்லது AMIE தேர்வில் பிரிவு A & B தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.<br>வயது: தேர்வு நடத்தப்படும் தேதி அந்த வருடம் ஜீலை முதல் தேதியில் 35 வயது பூர்த்தி செய்தவர். |
| | நியமன அலுவலர் | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| | தகுதிகாண் பருவம் | தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும். பொ.ப.து அலுவலர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு(Part I & II) ஊ.வ.துறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வு தாள்-IV. த.நா.ஊ.ச-1994 (ம) விதிகள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>தகுதிகாண் பருவ காலத்திற்குள் மேற்குறிப்பிட்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற தவறுவாரானால் ஐந்து ஆண்டுகளுக்கு ஒட்டு மொத்த விளைவு (Cummulative Effect) ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்படும். இந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேற்கூறப்பட்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும். இல்லையேல் பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார். |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணியின் பெயர் | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| ஒன்றிய பணி மேற்பார்வையாளர் | பதவி உயர்வு மூலம் | சாலை ஆய்வாளராக 7 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும். பொ.ப.து அலுவலர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு ஊ.வ.துறை அலுவலர்களுக்கான துறைத் தேர்வு தாள்-IV. த.நா.ஊ.ச-1994 (ம) விதிகள் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| | தகுதிகாண் பருவம் | தொடர்ந்து இரண்டாண்டு காலத்தில் ஓராண்டு தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும். |
| | ஊதிய நிர்ணயம் / ஊதிய உயர்வு | பணம் பெற்று வழங்கும் அலுவலர் (வ.வ.அ) |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணியின் பெயர் | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| ஒன்றிய பணி மேற்பார்வையாளர் | சிறப்பு நிலை/ தேர்வு நிலை | மாவட்ட ஆட்சியர் |
| | விடுப்பு அனுமதி | ஊதியம் வழங்கும் அலுவலர் விடுப்பு அனுமதிக்கலாம். 30 நாட்களுக்கு மேல் விடுப்பு எடுப்பின் அதன் விபரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்க வேண்டும். |
| | முன்பணம் | வாகன முன்பணம்/ வீடு கட்ட முன்பணம் மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்க வேண்டும். |
| | ஓய்வு | மா.ஆ.தலைவரின் அனுமதி. |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணி | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| உதவிப் பொறியாளர் | நேரடி ஆள் எடுப்பு மூலமாக | • அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் மூலம் பொறியியல் பட்டப்படிப்பு தேர்ச்சி. அல்லது AMIE தேர்வில் பிரிவு A & B ஒரு வருடத்திற்கு குறையாது நில அளவை செய்முறை பயிற்சி.<br>• மத்திய மாநில அரசுத் துறைகளில் ஓராண்டு பழகுநருக்கான பயிற்சி (வயது நியமன ஆண்டில் ஜீலை-1-ல் 35 வயது.) |
| | நியமன அலுவலர் | ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் |
| | தகுதிகாண் பருவம் | • தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும்.<br>• பொ.ப.துறை அலுவலர்களுக்கான/ சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் (Part I & II) தேர்ச்சி.<br>• ஊரக வளர்ச்சித் துறை த.நா.ஊ.ச-1994 (ம) விதிகள் தேர்வு தேர்ச்சி.<br>• மேற்கண்ட தகுதிகாண் பருவ காலத்திற்குள் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணி | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| உதவிப் பொறியாளர் | பதவி உயர்வு மூலம் (ஒன்றிய பணிமேற்பார்வை யாளர்/ இளநிலை வரை தொழில்நுட்ப அலுவலர்) | • அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் மூலம் பொறியியல் பட்டப்படிப்பு தேர்ச்சி. அல்லது AMIE தேர்வில் பிரிவு A & B ஒரு வருடத்திற்கு குறையாது நில அளவை பயிற்சி.<br>• பொ.ப.துறை அலுவலர்களுக்கான/ சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி.<br>• ஊரக வளர்ச்சித் துறை த.நா.ஊ.ச-1994 தேர்வு தேர்ச்சி<br>• ஒன்றிய பணிப்பார்வையாளர்/ இளநிலை வரைதொழில்நுட்ப அலுவலர் பதவியில் 4 ஆண்டுகள் பணி புரிந்திருக்க வேண்டும். |
| | தகுதிகாண் பருவம் | தொடர்ந்து இரண்டாண்டு காலத்தில் ஓராண்டு தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும். |
| | ஊதிய நிர்ணயம் | மாவட்ட ஆட்சித்தலைவர் |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணி | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| உதவிப் பொறியாளர் | ஊதிய உயர்வு | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) |
| | சிறப்பு நிலை/ தேர்வு நிலை | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| | விடுப்பு அனுமதி | 30 நாட்கள் வரை ஊராட்சி ஒன்றிய ஆணையர். 30 நாட்களுக்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டும். |
| | முன்பணம் | வாகன முன்பணம்/ வீடு கட்ட முன்பணம் மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்க வேண்டும். |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணியின் பெயர் | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| இளநிலை பொறியாளர் | பதவி உயர்வு மூலம் (ஒன்றிய பணிமேற்பார்வையாளர்/ இளநிலை வரை தொழில்நுட்ப அலுவலர்) | • அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் மூலம் பொறியியல் பட்டயப்படிப்பு தேர்ச்சி. (DCE).<br>• ஒன்றிய பணிப்பார்வையாளர்/ இளநிலை வரைதொழில்நுட்ப அலுவலர் பதவியில் 7 ஆண்டுகள் பணி புரிந்திருக்க வேண்டும். |
| | நியமன அலுவலர் | ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் |
| | துறைத் தேர்வுகள் | • பொ.ப.துறை அலுவலர்களுக்கான / சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் (Part I & II) தேர்ச்சி.<br>• ஊரக வளர்ச்சித் துறை த.நா.ஊ.ச-1994 (ம) விதிகள் தேர்வு தேர்ச்சி.<br>• மேற்கண்ட தகுதிகாண் பருவ காலத்திற்குள் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும். |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணியின் பெயர் | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| இளநிலை பொறியாளர் | தகுதிகாண் பருவம் | தொடர்ந்து இரண்டாண்டு காலத்தில் ஓராண்டு தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும். |
| | ஊதிய நிர்ணயம்/ஊதிய உயர்வு | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| | சிறப்பு நிலை/ தேர்வு நிலை | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| | விடுப்பு அனுமதி | 30நாட்கள் வரை ஊராட்சி ஒன்றிய ஆணையர். 30 நாட்களுக்கு மேல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்ப வேண்டும். |
| | முன்பணம் | வாகன முன்பணம்/ வீடு கட்ட முன்பணம் மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்க வேண்டும். |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணியின் பெயர் | நியமன முறை | தகுதிகள் |
|---|---|---|
| முதுநிலை வரைதொழில் அலுவலர் | நியமன அலுவலர் | ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநர் |
| | பதவி உயர்வு மூலம் (இளநிலை பொறியாளர்) | • அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் மூலம் பொறியியல் பட்டயப்படிப்பு தேர்ச்சி.<br>• முதுநிலை பட்டியல்படி இளநிலை பொறியாளராக 4 ஆண்டுகள் பணிபுரிந்திருத்தல் வேண்டும்.<br>• பொ.ப.துறை அலுவலர்களுக்கான/ சார்நிலை அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி.<br>• ஊரக வளர்ச்சித் துறை த.நா.ஊ.ச-1994 தேர்வு தேர்ச்சி. |
| | தகுதிகாண் பருவம் | தொடர்ந்து இரண்டாண்டு காலத்தில் ஓராண்டு தகுதிகாண் பருவத்தில் இருக்க வேண்டும். |

# தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பொறியியல் சார்நிலைப் பணி விதிகள்

| பணியின் பெயர் | நியமன முறை | தகுதிகள் |
| --- | --- | --- |
| முதுநிலை வரைதொழில் அலுவலர் | ஊதிய நிர்ணயம் / ஊதிய உயர்வு | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| | சிறப்பு நிலை / தேர்வு நிலை | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| | விடுப்பு அனுமதி | ஊதியம் வழங்கும் அலுவலர் விடுப்பு அனுமதிக்கலாம். 30 நாட்களுக்கு மேல் விடுப்பு எடுப்பின் அதன் விபரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிவிக்க வேண்டும். |
| | முன்பணம் | வாகன முன்பணம்/ வீடு கட்ட முன்பணம் மாவட்ட ஆட்சியர் அனுமதி வழங்க வேண்டும். |
| | ஓய்வு | ஊரக வளர்ச்சி இயக்குநர். |

# END